நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 93 /2025

## D.W. 2 –ன் வாக்குமூலம்

**(எதிரிதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | பெரியதண்டா |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **DW 2** |
| வயது | : | 61 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–04.11PM

1. நான் தற்போது பெரியதண்டாவில் குடியிருக்கிறேன். நான் டீக்கடை வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் எதிரி நாகராஜன்

என்பவர் எனது மருமகன் ஆவார். இந்த வழக்கின் புகார்தாரர் விஜயா என்பவரும் எங்கள் ஊரை சார்ந்தவர்தான். மேற்படி விஜயா நாகராஜன் மீது காசோலை வழக்கு தொடர்ந்துள்ளார்.

2. எனது மருமகன் நாகராஜனுக்கு மருத்துவ செலவுக்காக ரூ. 5,00,000/- பணம் தேவைப்பட்டது. என்னிடம் எங்காயவது கடன் வாங்கி தருமாறு கேட்டார். மேற்படி விஜயா வட்டிக்கு கடன் கொடுப்பது வழக்கம். மேற்படி விஜயாவின் மகளும் எனது மகளும், நண்பர்கள். அதன் அடிப்படையில் விஜயாவிடம் பணம் கேட்டதற்கு தருவதாக ஒப்புக்கொண்டார். அதற்கு ஆதாரமாக ஏதேனும் கேட்டார். கடந்த 2016 ம் வருடம் அதற்காக எனது மருமகன் நாகராஜ் பெயரில் கொளத்தூர் சித்திரப்பட்டிபுதூரில் இருந்து 3 சென்ட் நிலத்தை பொறுத்து கிரய ஒப்பந்த ஆவணம் எழுதி கொடுப்பதாகவும் அதுபோக அவர் கேட்டதன் பேரில் எனது மகள் சுதா பேரில் காசோலை ஒன்றும் மருமகன் நாகராஜ் பெயரில் இந்த வழக்கு காசோலையும் அந்த உடன்படிக்கை பத்திரத்திற்கு ஆதரவாக கொடுப்பதாக ஒப்புக்கொண்டு பணத்தை பெற்று கொண்டு ஒப்புக்கொண்ட படி ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தோம்.

3. மேற்படி விற்பணை ஒப்பந்தம் விஜயா பெயரில் ஏற்படுத்தப்பட்டது. ஒரு வருடத்திற்கு மேல் நாகராஜால் வட்டி கட்ட முடியவில்லை. ரூபாய் 100 க்கு 2 ரூபாய் என்ற விதத்தில் மாதம் 10,000/- வட்டி செலுத்த வேண்டி இருந்தது. மேற்படி கட்ட முடியாததால் மேற்படி இடத்தை கிரயம் செய்து கொடுத்துவிடுவதாக நானும், ரமேஷ் என்பவரும்பேசி பிரச்சினையை முடித்து வைத்தோம். ஒப்புக்கொண்ட படி நிலத்தை புகார்தாரர் விஜயா என்பவரின் மகள் கவிதா பெயரில் கிரயம் பெற்று கொண்டார்கள்.

4. நண்பர் என்ற முறையில் 2 காசோலைகளையும் வாங்கமால் விட்டுவிட்டோம். பிரச்சினை முடிந்தது என்று இருந்து விட்டோம். அதன் பிறகு தற்போது 6 மாதத்திற்கு முன்பு விஜயா வந்து தனக்கு மீதம் பணம் கொடுக்க வேண்டும் என்று பிரச்சினை செய்தார். நான் பிரச்சினையை பேசி முடித்து விட்டோம் ஏன் மீண்டும் மீண்டும் பணம் கேட்டு பிரச்சினை செய்கிறீர்கள் என்று கேட்டேன். மேலும் காசோலைகளை திருப்பி கேட்டபோது இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார்.

5. விஜயாவின் மகள் கவிதா என்பவரிடம்தான் பணம் வாங்கி வரவு செலவு வைத்து கொண்டோம். அதற்கும் விஜயாவிற்கும் சம்பந்தம் இல்லை.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன் தற்போது டீக்கடை வைத்துள்ளேன். என்னுடைய திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். எனது மனையும் நானும் வேறு வேறு சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். புகார் தாரர் விஜயா எனது மனைவியின் சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரியல்ல. நான் தற்போது பெரியதண்டாவில் வசிக்கிறேன்.
2. எனது மகளின் திருமணமும் காதல் திருமணம் என்றால் சரிதான். எனது மகளின் ஆரம்பத்தில் நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனது மருமகன் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறார். திருமணத்திற்கு முன்பாகவும் எனது மருமகன் நகை மதிப்பீட்டாளராக தான் பணி புரிந்து வந்தார். எனது மருமகனுக்கு திருமணம் முடிந்து சுமார் 17 வருடம் இருக்கும்.
3. எனக்கு சொந்தமாக வீடு மட்டும் உள்ளது என்றால் சரிதான். எனக்கு 3 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். எனது வீடும் புகார்தாரின் வீடும் சுமார் 1 பரலாங்கு இடைவெளியில் உள்ளது. எனது மருமகனின் அம்மாவிற்கு புற்று நோய் பாதிப்பு இருந்தது. அது சம்பந்தமாக சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் அவர் தற்போது இறந்துவிட்டார். சுமார் 10 வருடங்களாக நோய் பாதிப்பில் இருந்தார். அவரது சிகிச்சை செலவுக்கு பணம் இல்லாததால் கடன் வாங்கினோம்.
4. 2016ம் வருடத்திற்கு முன்பாக எனது மருமகன் தனது தாயாரின் மருத்துவ செலவுக்கு பணம் தேவைப்படுவதாக சொன்னார். எனது மகனுடன் இருவரும் ஒன்றாக வந்துதான் கேட்டார்கள். என்னிடம் தான் என் மகள் கேட்டார். நான்தான் கவிதாவிடம் கேட்க சொன்னேன். கவிதாவிடம் எனது மகள் நேரடியாக சென்று பணம் கேட்டார். பணம் கேட்ட அன்றே கொடுக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து பத்திர பதிவு மற்றும் காசோலைகள் பெற்று கொண்டுதான் பணம் கொடுத்தார்.
5. கவிதாவிடம் பணம் கேட்க போகும் போது நான் எனது மருமகன், மகள் ஆகியோர் ஒன்றாக சென்றோம். 2018ம் வருடம் கவிதா கேட்டதன் அடிப்படையில் கிரய

ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு கவிதாவின் பெயரில் கிரயம் செய்து கொடுத்தோம்.

6. இதே இடத்தைதான் விஜயா பெயரில் ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்திருந்தோம். ஒப்பந்தம் ஏற்படும்போது நான் செல்லவில்லை. அதேபோல் ரத்து பத்திரம் ஏற்படுத்தும்போதும் நான் செல்லவில்லை. கிரய பத்திரம் ஏற்படுத்தும்போதும் நான் செல்லவில்லை. ஏற்கனவே பேசி முடிக்கப்பட்டதால் நான் போகவில்லை. நான் மேற்படி ஆவணங்களை ஏற்படுத்தும்போது நான் செல்லாததால் யார் யாருடைய பெயரில் ஆவணங்களை ஏற்படுத்திகொண்டார்கள்என்றும், எவ்வளவு தொகையை பரிமாற்றம் செய்து கொண்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆனால் வாங்கிய பணத்திற்குதான் எழுதி கொடுத்தார்கள்.

7. கிரய செய்து கொடுத்த விவரத்தை எனது மருமகன் என்னிடம் சொன்னார். கிரய பத்திரத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. எந்த தேதியில் பேசி முடித்து கொண்டோம் என்று எனக்கு சரியாக தெரியவில்லை . ஆனால் பணப் பிரச்சினையை பேசி முடித்து கொண்டோம். பேசும்போது நானும், எனது நண்பர் ரமேஷ் மற்றும் எனது குடும்ப உறுப்பினர்கள் மட்டும் இருந்தோம். எங்களது வீட்டில் வைத்துதான் பேசினோம்.

8. நண்பர் என்ற முறையில் காசோலைகள் கொடுத்ததை மறந்துவிட்டோம். அதனால் பேசி முடிக்கும்போது கேட்கவில்லை. எனது மகளின் காசோலையை கேட்டு கொண்டு தான் இருக்கிறோம் . அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. கவிதா என்பவர் தான் எங்கள் ஊரில் வட்டிக்கு பணம் கொடுக்கிறார்.விஜயா பணம் கொடுப்பதில்லை. அதனால் பாதிக்கப்பட்ட நபர்கள் நிறைய உள்ளனர்.

9. பாதிக்கப்பட்ட நபர்கள் யாரும் இதுவரை புகார் அளித்ததாக எனக்கு தெரியவில்லை. மேற்படி பஞ்சாயத்து பேசிய இடத்தில் தொகை எதுவும் பரிமாரிக்கொள்ளவில்லை. காசோலை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக புகார்தாரும், அவரது மகளும் பிரச்சினை செய்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை. கவிதாவிடம் பணம் வாங்கும்போது நான், எனது மருமகன் மற்றும் மகள் ஆகியோர் ஒரு காலை

நேரத்தில் வாங்கினோம். கவிதா ரொக்கமாகதான் பணம் கொடுத்தார்.

10. எத்தனை ரூபாய் தாள்களாக கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. உண்மையில் இந்த வழக்கின் எதிரி எனது மருமகன் என்ற காரணத்தினால் விஜயா என்பவரிடம் இரண்டு முறை நாணயமாக நடந்து கொண்டதால் 3 வது முறை ரூ. 5,00,000/–பணம் கடன் வாங்கி அதற்கு வட்டி கேட்காமல் கைமாற்று கடனாகத்தான் கொடுத்தார் என்றாலும், எனது மருமகன் அந்த பணத்தை சரியாக திரும்ப கொடுக்காததால் விஜயா கேட்டதன் அடிப்படையில் தொகையை திருப்பி கொடுக்கமால் எனது மருமகன் அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்து அப்போதைக்கு விஜயாவை சமாதானம் செய்து அனுப்பி வைத்தார் என்றாலும், அதன் பிறகும் காசோலை தொகையை கொடுக்காததால் தான் இந்த வழக்கை விஜயா தாக்கல் செய்துள்ளார் என்றாலும், சரியல்ல. விஜயாவிடம் நாங்கள் பணம் கடன் வாங்கவில்லை. அவருக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை. தினமும் நூறு நாள் வேலைக்கு தான் சென்று வருகிறார்.

11. விஜயாவிற்கு அவரது கணவர் வகையிலும், பெற்றோர் வகையிலும் காடு தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. பெற்றோர் வகையில் காடு தோட்டம் இல்லை. நான் சொல்வதுபோல் விஜயா நூறு நாள் வேலைக்கு செல்கிறார் என்றாலும், மேற்படி காடு தோட்டத்தில் இருந்த வந்த வருமானத்தை வைத்தும் எனது மருமகனுக்கு கடன் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. எனது மருமகனுக்கு ஆதரவாக விஜயாவிற்கு பணம் கொடுக்க வசதி இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. மேற்படி கிரய ஆவணம் ஏற்படுத்தும்போது நான் இல்லை என்பதால் இடம் எவ்வளவு தொகைக்கு விலை பேசபட்டது, எவ்வளவு தொகை பரிமாற்றம் செய்யப்பட்டது உள்ளிட்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், எனது மருமகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மருமகனும், மகளும் தனியாக இருக்கும் புகார்தாரர் விஜயாவிடம் ஆசை வார்த்தை கூறி மேற்படி தொகையை கடனாக வாங்கி கொண்ட புகார்தாரரை ஏமாற்றும் எண்ணத்தில் காசோலையை கொடுத்து மோசடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—05.13PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**